S.T.C .NO.1107/2025 Date:12.03.2026

Page No.

பு.சா.1. கிருஷ்ணன், த/பெ. தேவராஜ், வயது.74

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:–**</u>

எதிரி ஆசிரியராக வேலை செய்து வருகிறார். மேற்படி விவரத்தை சட்ட அறிவிப்பிலும் என்னுடைய மனுவிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்ட தேதி எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் 30.12.2025 தேதியிட்ட சட்ட அறிவிப்பு என்னுடைய வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு நான் தான் அனுப்பினேன். **அந்த சட்ட அறிவிப்பு எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆனால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. மேற்படி சட்ட அறிவிப்பை எதிரி வீடு அடமானம் செய்திருந்ததற்காக அனுப்பினேன். மேற்படி வீடு அடமானம் செய்யப்பட்ட தேதி எனக்கு நினைவில்லை. சுமார் 5 வருடம் இருக்கலாம். 12.07.2021 அன்று எதிரியும் நானும் உடன்படிக்கை செய்துகொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த உடன்படிக்கை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். 2021ம் வருடத்தில் ஏற்பட்ட மனக்கசப்பின் காரணமாக 3 மாதத்தில் அவர் பணத்தை திருப்பி தருவதாகக் கூறினார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.12.2024 அன்று எனக்கும் எதிரிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் காசோலையானது Exceeds Arrangement என்று திருப்பப்பட்டுள்ளதால் அதை எதிரி பூர்த்தி செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 2021ம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையின்படி எதிரியிடம் இருந்து Surety–க்காக பெறப்பட்ட காசோலையை தற்போது பூர்த்தி செய்து எதிரி மீது பொய்யா புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 22.03.2025 தேதியிட்ட சட்ட அறிவிப்பிற்கு எதிரி பதிலறிவிப்பு அளிக்கவில்லை என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் தெரியாது. மேற்படி சட்ட அறிவிப்பை 24.03.2025 அன்று எதிரி பெற்றுக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டு 50 நாட்கள் கழித்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் Records படி சரிதான். எனவே, இந்த வழக்கு கால

வரையறையின்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.03.12 18:45:06 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.